உ

கணபதி துணை

திருவதிகை அடுத்த மேல்பால்

கெடிலநதித்தென்கரையில் விளங்கும்

மேலிருப்பு நகரில் எழுந்தருளியிருக்கும்

# முத்தாலம்மன் பதிகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
910
10 MAY 1927

இவை

ஷெடியூர் கர்ணம்

மகா-௱-௱-ஸ்ரீ ஆனையப்பிள்ளை குமாரர்

துரைசாமிப்பிள்ளையவர்களால்

இயற்றியதை

திருக்கைலாயபாம்பரை

பொம்மையபுரம்

ஸ்ரீ சிவஞான பாலயசுவாமிகளாதீனத்து

வித்துவானும்

பண்ணுருட்டி ஸ்ரீமணி ஐயசுவாமிகளாதீனத்து அதிபருமாகிய

மணி, சுப்பிரமணிய ஐயரவர்களால்

பார்வையிடப்பட்டு

விழுப்புரம்,
...ான் அச்சியந்திரசாலையில்,
...பதிப்பிக்கப்பட்டது.
...அ, பிரபவ ஹு மேடமதி 1-உ.

Q25:38.21MP
N27
128942

910
10 MAY 1927
MADRAS

உ

இவை

# சிறப்புப்பாயிரம்.

---

2723
894 811

பண்ணுருட்டி

ஸ்ரீ மணி ஐயாசுவாமிகளாதீனத்து அதிபர்

**மணி. சுப்பிரம்மணிய ஐயரவர்களால் இயற்றியது.**

அறுசீர்க் கழிநெடிலடிலாசிரிய விருத்தம்.

சீருறுங் கஞ்சம்வள்ளைச் செறிகெடிலத்தின்றென்பா
லேருறுமேலிப்பிற் கருணீகரியானையப்பன்
றேருறுந்தவத்துதித்த துரைசாமிச்செல்வன்செய்தப்
பேருறும் முத்தாலம்மைப்பதிகமும் பிறங்கமாதோ.

---

178942

சிவகணபதி துணை

மேலிருப்பு நகரில் எழுந்தருளியிருக்கும்

# முத்தாலம்மன் பதிகம்.

---

காப்பு.

உலகெலாம் புகழ்ந்தோங்குங் கெடிலத்தி
னிலகு தென்கரை மேலிருப்பென்பதி
நிலவுமாரி முத்தாலம்மை நீட்டுதி
சொலவே மாமுகற்றாளிணைத் தொழுருவாம்.

ஆதியே யமரர்பணி சோதியே சோதியு
ளமர்ந்திடு நீதியுருவே
யண்டமகிலாண்டமும் பரமாண்டமும்பணியு
யன்னையே யாதிசத்தி
பாதிமதிகொட்பரன் பக்கற்பராபரை
யாகிடும் பரமேட்டி நீ
பன்னுமறையாகமக் கலைகளுந் தேடரிய
பாளர்ந்தான் றங்கை நீ
கோதில் பெரியோர்மனக் கோயிலிலமர்ந்திடுங்
கோமாரியான சத்தி
கூறுமடியார்க்குதின மருண்மாரி பொழிகின்ற
கோமகளான சத்தி
மாதிரமெலாம்புகழுங் கெடிலநதி தென்பால்
வயங்குமேலிருப்பு நகர்வாழ்
வாரியைய்றக்கடத்தேற்றவரை நாரியே
மாரி முத்தாலம்மையே. (1)

செகமெலாம் புகழவே சின்னம்மை பேரம்மை
யெனவேசிறந்த தாயே
சிற்பரை பராபரி மனோன்மணி கௌமாரி
சேர்ந்தபுகழ் கலியாணியே
யிகபரமிரண்டினிடை யிணையில்பேரின்பருளு
மெக்கலாதேவி யுமையே

யெங்குநிறை யானந்தவல்லி யென்னம்மையே
யிலகிடுந்திரி சூலியே
ககனோடுபுவனமுங் காத்தாளு நாயகி
கருணாகரச் செல்வியே
கடையனேனீடேற கண்ணோக்கு மம்மணி
கனகாம்பரக் கௌரியே
மகிதலம்புகழ் கெடிலநதிக்கரைத் தென்பாலில்
வயங்குமே விருப்புநகர்வாழ்
வாரிலை யறற்கடத்தேற்றவரை காரியே
மாரி முத்தாலம்மையே. (2)

128992

ஈருறுமறுகோடி சத்திபேதந்தனிற்
சிறந்திடுஞ் சத்தியாய
செல்வியே வீட்டம்மை தாயானமாரியே
செப்புமோங்காரி நீலி
நீருறுங்கங்கையை நாயகன் பூசைக்கு
நியமமாயேற்ற தேவி
நிகரறவிளங்குபுவி ரக்ஷகி நிரந்தரி
துரந்தரி நிமலரூபி
பாருறுமக்களுக் கிலகவே நின்னொரு
விலச்சினைப்பொறித்த பரையே
பண்பான ஜமதகனி நண்பாக கொண்டிடும்
பராபரி வல்லி யுமையே
வாருறுங் கெடிலநதித் தென்றிசையில் வளமுடன்
வயங்குமே விருப்புநகர் வாழ்
வாரியையறற்கடத் தேற்றவரை நாரியே
மாரிமுத்தா லம்மையே. (3)

சிங்கவாகனிமகிட சங்கரி யம்பிகை
செகச்சோதி யானவளு நீ
திரிசூலி முக்கண்ணி வேதாந்தவேதி நீ
திரியம்பிகை தேவி நீ
தங்கமயமேனிநீ யெங்குநிறை தேவிநீ
சத்திசிவசூலி நீலி
கண்டையொடு கிண்கிணிச் சிலம்பொலி யாற்றிடத்
தாணிவலம் வருபவளு நீ
பங்கயன்முதலானோர் பணிசெய்து போற்றிடும்
பாதாம்புயத்து வல்லி
பரிவாக யெளியேனை கைவிடா தென்றுநீ
பாதுகாத்தருளு மம்மா

மங்காத கெடிலநதி தென்பாலி லோங்கியே
வயங்குமே விருப்புநகர்வாழ்
வாரியை யறற்கடத் தேற்றவரை நாரியே
மாரி முத்தாலம்மையே (4)

அன்பர் தமுளக்கோயி லகலாத தேவிநீ
யாரணங்தேடு மரசி
யகிலபுவனங்காக்கு மன்னைநீ யடியேனை
யாதரித்தாளு மம்மா
யின்பாக சமதக்னிமுனிவனுட னிலகியே
யில்லறங்காட்டு மயிலே
யிணையிலாப் பரசுராமத்தேவை யீன்றருளு
மெக்கலாதேவி யுமையே
துன்பா திநீக்கி யடியார் தமைக்காத் திடுந்
தோல்கயே கன்னனூர் வாழ்
துரந்தரி புரந்தரி சௌந்தரி நிரந்தரி
சுடரொளியானவளு நீ
மன்பதைகள் பவநீக்கி கெடிலநதி தென்பாலில்
வயங்குமே விருப்புநகர் வாழ்
வாரியை யறற்கடத்தேற்றவரை நாரியே
மாரிமுத்தா லம்மையே (5)

எண்ணருமிடாகினிக் கூட்டங்க ளேவல்கேட்
டுன்முன மிறைஞ்சி நிற்க
யெழிலான பரசுரா மத்தேவும்புடைநின்று
யியங்கிடுஞ் சமயநோக்க
பண்ணருங் காவல்புரி கார்த்தவீரியார்ச்சுனன்
பணிந்து முக்காலு மேற்ற
பரிவார தேவதைகள் விரிவாக வெண்டிக்கும்
பரவிகை கூப்பிநிற்க
நண்ணரும் மணிகள் கொடுநகுகதிர் வழங்கபுரி
நவையறும்பீட மதிலே
நவிலரும்நிம்பநகு தார்வேய்ந்து யாட்சிபுரி
நாகாம்பிகைத் தேவியே
வண்புனற் கெடிலநதி வளமுறுந் தென்பாலில்
வயங்குமேவிருப்புநகர் வாழ்
வாரியையறற்கடத் தேற்றவரை நாரியே
மாரிமுத்தா லம்மையே. (6)

உரககங்கணியான சத்தியே யாமளா
வுலகுபுகழ் மாரி தாயே

யோ தருநின்புகழை மறையனந்தங்கூடி
யோதவினும் முடியாததே
மாகதந் தழைக்கவரு மேனியுடை மாதேவி
மதங்கி சுந்தரி பைரவி
மன்னுகுடிலைச் சொரூபி நவசத்தி சிவசத்தி
மகேச்சுரனிட சத்தியே
காகமதிற்றோன்றிடுங் கௌமாரி யம்மணி
கனகாம்பரன் சோதரி
கந்தரநன்னிற வளகபுராதனி யெனவே மறைகட்
கருநித்துதிக்கு மணியே
வாநதி யெனத்திகழுங் கெடிலத்தின் றென்பால்
வயங்குமேலிருப்பு நகர்வாழ்
வாரியையறக்கடத்தேற்றவரை நாரியே
மாரிமுத்தா லம்மையே. (7)

காசினியெலாம்போற்றக கட்செவிப்பணிபூண்ட
கௌரியே யிமையவல்லி
காகுத்தன்சோதரி ரேணுகாமகேஸ்வரி
கருதுபடை வீட்டீஸ்வரி
பாசிலைப்படையோடு சூரிவாள்வேத்திரம்
பாணியிற்கொண்ட வமுதே
பண்பானதமருக மேந்திடு மிறைவியே
பஞ்சாக்ஷரச் சொரூபியே
நேசிக்கிமடியருளக் கமலத்துறைந்திடும்
நின்மலானந்த மணியே
நிலவு சுக்கிரவாரந்தோறு நின் சன்னிதியில்
நிகழ்ந்திடும் பெருமையென்னே
மாசறும் மூத்தர்மனமொத்த கெடிலத்தென்பால்
வயங்குமே லிருப்புநகர்வாழ்
வாரியையறக்கடத்தேற்றவரை நாரியே
மாரிமுத்தா லம்மையே. (8)

178942

நலமான பமரங்கண் மொய்த்துமது கவரவலர்
நாண்மலர் சோலையோடு
நாடுபொறி கூடுமரவிந்தமலர் வாவியும்
நவிற்கூபமொடு பொய்கையும்
பலமானவிஞ்சியும் மண்டபங்காவணம்
பத்திவாய் மறுகினோடு
பகர்சதுக்கஞ்சந்தி சாவடிச்சினகரம்
பாங்குடனமைந்த பதியிற்

குலமானவந்தணரொடங்கி குலமன்னரும்
குலவிடும் வைசிய சூத்திரர்
கூடியேகாளு நினைநாடி சன்னிதியினிற்
கொண்டாட நின்றுட்கொளும்
வலமாக திரைவீசிவரு கெடிலத் தென்பாலில்
வயங்குமேலிருப்பு நகர்வாழ்
வாரியையறக்கடத்தேறவரை நாரியே
மாரிமுத்தா லம்மையே. (10)

மேலநகர் மாரியே கருணைநிறை வாரியே
விண்ணவர்க் குபகாரியே
மிளிருநின்றன்பத மிறைஞ்சு மடியார்க்கென்றும்
மேன்மைதருவிமல வல்லி
சாலநின்னடியிணைக் கடிமையாங் கருணீக
துரைசாமி சாற்றலங்கல்
சத்துவகுணத்தொளிரு முத்தமியணிந்தென்னை
சந்ததமாண்டருளுவாய்ப்
பாலகணபதி வேலன் பாசுராமத் தேவும்
பாங்கானமாரி நீயும்
பண்பாக வின்னகரிலென்றுமே செடலாட்டி
பரிவுடனோங்கி வாழ்வாய்
மாலங்கொணர்ந்து திரைவீசு கெடிலத்தென்பால்
வயங்குமேலிருப்புநகர்வாழ்
வாரியை யறக்கடத்தேற்றுவரை நாரியே
மாரிமுத்தா லம்மையே. (10)

முற்றும்.

# கும்மி.

கும்மியடிப்பெண்கள் கும்மியடி யிரு
கொங்கை குலுங்கவே கும்மியடி
நம்மையாள்மாரி முத்தாலம்மையை
நாடிக்கும்மியடியுங்கடி—பதம
பாடிக்கும்மியடியுங்கடி (1)

சீரார்கெடிலத்தென்கரையாமதைச்
சேரும்மேலிருப்பெனுநகராம்
நேராயநகர்வாழ்ந்திடும்மாரியின்
நின்மலர்ப்பாதம் போற்றுங்கடி (2)

சாலையுஞ்சோலையுஞ்சார்ந்திடுமாமங்கு
சந்ததமயில்குயில்போந்திடுமாம்
மேலாஞ்சிறப்புகள்பற்பலகொள்பதி
மேவிருப்பைநோக்கியடியுங்கடி (3)

மஞ்சுகள்வந்துதவழ்வனவாமங்கு
மாம்பொழிழ்கள்ளையுமிழ்வனவாம்
இஞ்சியகழிகட்சூழ்வனவாமதன்
எற்றத்தைப்பாடியடியுங்கடி (4)

வனசமலர்ந்திடுவாவிகளாமங்கு
பனசநிறைந்திடுங்காவுகளாம்
நனிசெய்சிறப்புகள்நண்ணிடுமிந்நகர்
நற்பரையாலயம்நாடுங்கடி . (5)

நாகரெலாமங்கேநின்றிறைஞ்சத்தூபி
நாடிடும்நாகர்நாட்டினையே
போகிகவிகையாய்நின்றுநிகழற்றகிழ்ப்
பொருந்திவாழ்மாரிதாள்போற்றுங்கடி (6)

வேப்பிலைவேத்திரமேந்துவளாமம்மை
வேணபிழைகளைத்தாங்குவளாம்
கூப்புங்கரத்தொடுவேணசனமம்மை
கோயிற்குவாரதைபாருங்கடி (7)

கட்செவிகங்கணமணிபவளாமம்மை
கார்த்தவீர்யார்ச்சுனன்காவலளாம்
பட்சமுடன்வந்துபணிபவரைதினம்
ரட்சிக்குமம்மைசீர்ப்பாடுங்கடி (8)

மன்னுஞ்சமதக்னிமுனிபன்னியம்மம்மை
மாநிலம்போற்றிடும்பேரன்னையாம்
கன்னியிளங்கொடிரேணுகாதேவியின்
கழலிணைப்பாடியடியுங்கடி (9)

எட்டாம்விழாக்கொண்டுநித்திலச்சிவிகையில்
எக்கலாதேவிவருகையிலே
கொட்டிடும்பெரியமேளக்கச்சேரிகள்
கூட்டமாய்வருவதைப்பாருங்கடி (10)

மத்தாப்புபந்தம்நெருங்கவிருபக்கம்
மாரிவருங்கோலங்காணுங்கடி

மாமயிலொத்தக்கணிகையர்செய்நட
மாட்சியுங்கொண்டேயடியுங்கடி (11)

மாரியினென்பதாமுற்சவங்கண்டிட
மானேகோயிலுள்வந்திடுவாய்
நாரியாமம்மணியாகூடிசெயுமிந்த
நற்காவணங்கண்டடியுங்கடி (12)

கொத்துருளோப்பொடுலஸ்தர்களுமங்கே
கூறிடுங்கியாவின்லயிட்டுகளும்
பத்திருசூரியர்வந்தாரெனத்தோற்றும்
பந்தலைக்கண்டேயடியுங்கடி (13)

இத்தகைமண்டபச்சாலையிலேயம்மை
யேகாந்தமாகயிருக்கையிலே
பத்தர்களெல்லாம்பாவிச்செடல்குத்தி
பத்தியாய்வருவதைப்பாடுங்கடி (14)

பாடிப்பாடியன்பர்பணிந்துதுதித்திட
பாங்குடனகருணைசெய்மாரிபதம்
ஓடிப்பாடியருள்பெற்றிடவொண்டோடி
யுகர்துக்கும்மியடியுங்கடி (15)

ஆவணக் காப்பக
சென்னை-600 008.
128942